Downloaded from:-www.paritchai.com

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி 5

EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2019

# மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2019

வினாத்தாள் இல. 2

## வினாத்தாள் I

2019.03.31 / 09:30 - 10:15

45 நிமிடம்

சுட்டெண் :..........................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

* உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக் கோட்டின் மீது** எழுதுக.
* **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* இவ்வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே தருக.**
* ஒவ்வொரு வினாவிற்கும் **மூன்று** விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
* செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/I/T/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/I/T/CH |


[பக். 2 ஐப் பார்க்க


Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com





- **1, 2** ஆகிய வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவுசெய்க.


**1.** 



(1)



(2)


(3)


**2.** 



(1)



(2)



(3)


- **3, 4** ஆகிய வினாக்களில் ஓர் உரு ஏனைய இரு உருக்களிலிருந்தும் வேறுபடுகின்றது. வேறுபடும் உருவைத் தெரிவுசெய்க.


**3.** 
(1)


(2)


(3)

**4.** 
(1)


(2)


(3)

- **5, 6** ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் **மூன்றை** ஒரு கூட்டமாகவும் **இரண்டை** வேறொரு கூட்டமாகவும் வேறுபடுத்தலாம். அவ்விரு கூட்டங்களையும் **சேராதது** யாது ?

**5.** புகையிரதம், விமானம், பேருந்து, கப்பல், சைக்கிள், படகு

(1) விமானம் (2) பேருந்து (3) படகு

**6.** வண்ணத்துப்பூச்சி, ஆந்தை, தேனீ, நத்தை, வௌவால், சாக்குருவி

(1) வண்ணத்துப்பூச்சி (2) வௌவால் (3) நத்தை

**7.** கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் சரியாக எழுதப்பட்டுள்ள வாக்கியத்தைத் தெரிவுசெய்க.

(1) சிறந்த நூல்கள் நல்ல நன்பர்களைப் போன்றன.

(2) சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் போன்றன.

(3) சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் பொன்றன.

[பக். 3 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



சுட்டெண் :..............................................

● ▲ + ▲ = 12, ▬ − ▲ = 3, ▬ + ▲ = ⬢ எனவும் கொண்டு **8, 9** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

**8.** ▬ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது ?

(1) 7 (2) 8 (3) 9

**9.** ▲ + ▬ + ⬢ இற்குப் பொருத்தமான பெறுமானம் யாது ?

(1) 28 (2) 30 (3) 32

**10.** அரசின் வெகுமதியாய் நூலிதனைப் பெற்றேன்
அறிவு பெருகிடவே நூலிதனைக் கற்பேன்
தாய் நாட்டின் வளமென நூலிதனைக் காப்பேன்
பல மாணவரும் பயின்றிடவே நூலிதையே அளிப்பேன்

இக்கவிதை தரும் **முழுமையான** கருத்தாவது

(1) இலவசப் பாடநூல்களை அரசின் பரிசாய்ப் பெற வேண்டும்.

(2) இலவசப் பாடநூல்களை அறிவை அதிகரிக்கக் கற்க வேண்டும்.

(3) இலவசப் பாடநூல்களை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

**11.** 'எதையும் ஆராய்ந்தே செய்தல் வேண்டும்.' என்ற கருத்தைத் தரும் பழமொழி யாது ?

(1) இரு தோணியில் கால் வைக்காதே.

(2) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.

(3) ஆழம் அறியாமல் காலை விடாதே.

**12.** சொற்கள் உள்ள அட்டைகள் வைத்திருக்கப்பட்டிருக்கும் கோலத்தை விளங்கி வெறும் அட்டைக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.

| பதவி | வித்து | தும்பு | புனித | | திகதி |
|---|---|---|---|---|---|


(1) சந்தி (2) தந்தி (3) கத்தி

**13.** சாலினி பணக்கார வீட்டுப் பிள்ளை. அவள் சிறுவர் சஞ்சிகைகள், சித்திரக்கதைகள் எனப் பலவற்றைப் பாடசாலைக்குக் கொண்டு வருவாள். அவற்றை ஏனைய மாணவர்களுக்குக் காட்டுவாள். ஆனாலும், யாருக்கும் வாசிக்கக் கொடுக்கமாட்டாள்.

அவளைப் பற்றிக் குறிப்பிடுவதற்குப் **பொருத்தமானது**

(1) உலோபி (2) பொதுநலவாதி (3) சுயநலவாதி

**14.** பின்வரும் உருக்கள் ஒவ்வொன்றிலும் உள்ள சமச்சீர்க் கோடுகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் ஒழுங்கில் அவ்வுருக்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.



A B C

(1) A C B (2) B C A (3) C A B



Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com




**15.** பின்வரும் கலந்துரையாடலை வாசிக்க.

*A* - விட்டு விட்டுப் பார்த்தால் பாதிப்பு ஏற்படாதுதானே ?
*B* - தொலைக்காட்சியைத் தொடர்ந்து பார்க்கக்கூடாது.
*C* - கண்களுக்குப் பாதிப்பு ஏற்படும்.
*D* - ஏன் ? என்று சொல்லவில்லையே!

இக்கலந்துரையாடல் மிகப் பொருத்தமான ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.


(1) *A D C B* (2) *B D C A* (3) *C B D A*

**16.** பின்வரும் உருக்களில் உள்ள எண் கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்க வேண்டிய எண்ணைத் தெரிவுசெய்க.




(1) 42 (2) 44 (3) 46

**17.** ஓர் எரியும் மெழுகுவர்த்தியின் உயரம் அது கொளுத்தப்பட்ட கணத்திலிருந்து எடுத்த நேரத்துடன் மாறும் விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.




எரியும் கணம் 5 நிமிடத்திற்குப் பின்னர் 10 நிமிடத்திற்குப் பின்னர் 15 நிமிடத்திற்குப் பின்னர் 20 நிமிடத்திற்குப் பின்னர்

இதற்கேற்ப மெழுகுவர்த்தி மேலும் எவ்வளவு நேரத்துக்கு எரியுமென ஊகிக்கலாம் ?

(1) 5 நிமிடம் (2) 10 நிமிடம் (3) 15 நிமிடம்

**18.** பின்வரும் படத்திற்கு ஏற்ப வெற்று அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.






(1)




(2)



(3)

**19.** கீழே தரப்பட்டுள்ள வடிவத்தை ஒரு சதுரமாக மாற்றுவதற்கு அதனுடன் சேர்க்கப்பட வேண்டிய அடைப்புகளின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது ?



(1) 5 அடைப்புகள்
(2) 9 அடைப்புகள்
(3) 10 அடைப்புகள்

[பக். 5 ஐப் பார்க்க


Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com




● **20, 21** ஆகிய வினாக்களில் அடைப்பினுள் உள்ள உருக்களைக் கொண்டு ஆக்கத்தக்க வடிவத்தைத் தெரிவுசெய்க.

**20.**






(1)





(2)




(3)

**21.**






(1)



(2)



(3)

**22.** 120 மாம்பழங்களைக் கொண்ட மாம்பழக் குவியலில் $\frac{3}{8}$ பழுதடைந்ததன் காரணமாக அகற்றப்பட்டது. மீதியாக இருந்த நல்ல மாம்பழங்கள் மூன்று நண்பர்களிடையே சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஒரு நண்பனுக்குக் கிடைத்த மாம்பழங்களின் எண்ணிக்கை யாது ?

(1) 15 (2) 20 (3) 25


**23.** ஒரு கடிகாரத்தின் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையேயுள்ள கோணம் ஒரு செங்கோணத்திலும் பார்க்கக் கூடியதாக இருக்கும் சந்தர்ப்பம் பின்வரும் எந்நேரத்தில் காட்டப்படுகிறது ?


(1) மு.ப. 9.30 (2) பி.ப. 12.15 (3) பி.ப. 3.00

**24.** மூன்று பென்சில்களின் விலை ரூ. 36 ஆகும். இரண்டு பேனைகளின் விலை இரண்டு பென்சில்களின் விலையிலும் பார்க்க ரூ. 6 இனால் கூடியதாகும். ஒரு பேனையின் விலை எவ்வளவு ?


(1) ரூ. 12 (2) ரூ. 15 (3) ரூ. 18

**25.** வெறுமையாயுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.






(1)



(2)



(3)

**26.** தந்தையின் வயது மகனின் வயதின் 11 மடங்காகும். இன்னும் 3 வருடங்களின் பின்னர் அந்த தந்தையின் வயது மகனின் வயதின் 6 மடங்காக இருக்கும். அவ்வாறெனின், தற்போது அந்த தந்தையின் வயது எத்தனை வருடங்களாகும் ?

(1) 27 வருடங்கள் (2) 30 வருடங்கள் (3) 33 வருடங்கள்


[பக். 6 ஐப் பார்க்க


Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com




**27.** ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு கீழே காணப்படுகின்றது. இதனை ஒரு சதுரமுகியாகத் தயார் செய்யும்போது அது தோற்றும் விதத்தைத் தெரிவுசெய்க.






(1)



(2)



(3)

**28.** பெப்ரவரி மாதத்தில் 29 நாட்களை உடையது நெட்டாண்டாகும். ஒவ்வொரு 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நெட்டாண்டு வரும். 2016 ஆம் ஆண்டு நெட்டாண்டானால் 29 நாட்களைக் கொண்ட பெப்ரவரி மாதங்கள் எந்த ஆண்டுகளில் வரும் ?


(1) 2018 உம் 2022 உம்


(2) 2020 உம் 2024 உம்

(3) 2022 உம் 2026 உம்


● **29, 30** ஆகிய வினாக்களில் உள்ள கோலத்திற்கேற்ப அடுத்து வர வேண்டிய உருவைத் தெரிவுசெய்க.

**29.**






(1)





(2)




(3)

**30.**






(1)



(2)



(3)

**31.** ஒரு பரீட்சையில் கீதா இந்திரனை விட கூடிய புள்ளிகளைப் பெற்றாள். முரளியை விட கீதா குறைந்த புள்ளிகளைப் பெற்றாள். இதற்கேற்ப **பிழையான** கூற்று யாது ?

(1) ஆகக் குறைந்த புள்ளிகளை இந்திரன் பெற்றுள்ளான்.

(2) இந்திரனிலும் முரளி கூடிய புள்ளிகளைப் பெற்றுள்ளான்.

(3) முரளியும் கீதாவும் சம புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

[பக். 7 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**32.** ஓர் இடத்திலிருந்து பயணத்தை ஆரம்பித்த சிறுவன் ஒருவன் 100 மீற்றர் வடக்கு நோக்கியும் அவ்விடத்திலிருந்து 50 மீற்றர் கிழக்கு நோக்கியும் அவ்விடத்திலிருந்து மேற்கு நோக்கியும் 50 மீற்றர் சென்று பயணத்தை முடித்தான். அச்சிறுவன் தொடக்க இடத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உள்ளான் ?

(1) 100 மீற்றர்  (2) 150 மீற்றர்  (3) 250 மீற்றர்

**33.** ▲□□●▲●□ = 8553836 ஆகும்.

இதற்கேற்ப வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

●□□▲□ = ..................

(1) 38538  (2) 36586  (3) 56386

**34.** கொழும்பிலிருந்து புத்தளத்திற்குச் சென்ற ஒரு பேருந்து சில நகரங்களைக் கடந்து சென்ற விதம் கீழே காட்டப்பட்டுள்ளது.

"அது சிலாபம் நகரத்தைக் கடந்து செல்வதற்கு முன்னர் மஹாவெவ நகரத்தைக் கடந்தது. அது சிலாபம் நகரத்தைக் கடந்து சென்ற பின்னர் மங்களஎலிய நகரத்தைக் கடந்து சென்றது."


பேருந்து புத்தளத்திலிருந்து கொழும்புக்கு அதே பாதையில் திரும்பி வரும்போது அந்நகரங்களைக் கடக்கும் ஒழுங்குமுறை யாது ?

(1) சிலாபம், மங்களஎலிய, மஹாவெவ

(2) மங்களஎலிய, சிலாபம், மஹாவெவ


(3) மஹாவெவ, சிலாபம், மங்களஎலிய

**35.** இவ்வுருவில் உள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது ?



(1) 9  (2) 11  (3) 13

**36.** கீழே தரப்பட்டுள்ள இரு உருக்களுக்கும் ஏற்ப Ⓐ அளவுள்ள ஓர் அட்டைத்தாளிலிருந்து Ⓑ அளவுள்ள எத்தனை வட்டங்களை உயர்ந்தபட்சம் வெட்டலாம் ?




(1) 20  (2) 24  (3) 30


[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**37.** பின்வரும் வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ள கனவுருவின் எல்லாப் பக்கங்களினதும் பரப்பளவு எத்தனை சதுர சென்ரிமீற்றர் ஆகும் ?




(1) $79\ cm^2$ (2) $82\ cm^2$ (3) $94\ cm^2$

**38.** 1 தொடக்கம் 100 வரையுள்ள எண்களை எழுதும்போது '0' எழுதப்படும் தடவைகளின் எண்ணிக்கை யாது ?

(1) 9 (2) 10 (3) 11

**39.** தேக்கரண்டி ஒன்றில் கொள்ளும் திரவத்தின் கனவளவு 5 மில்லிலீற்றர் ஆகும். நாளொன்றுக்கு இரு தடவைகள் 2 தேக்கரண்டி வீதம் மருந்து குடிப்பதற்காக 100 மில்லிலீற்றர் மருந்து அடங்கியுள்ள போத்தல் எத்தனை முழு நாட்களுக்குப் போதுமானது ?

(1) 4 (2) 5 (3) 10

**40.** ஒரு பணப் பையில் ரூ. 640 பணம் நான்கு நாணயத் தாள்களாக உள்ளது. அவை

(1) ரூ. 500, ரூ. 100, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்
(2) ரூ. 500, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்
(3) ரூ. 500, ரூ. 50, ரூ. 20 ஆகியன உட்பட 4 நாணயத் தாள்கள்

❊ ❊ ❊

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com

සියලු ම හිමිකම් ඇවිරිණි]
முழுப் பதிப்புரிமையுடையது]
All Rights Reserved]

எம். சாஹிர் சேர்

அறிவுமதி 2019 — 5

**EXAMINATION FOR GRADE FIVE STUDENTS FOR SELECTION TO SCHOOLS AND FOR THE AWARD OF BURSARIES, MODEL - 2019**

**மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப் பரீட்சை - 2019**

வினாத்தாள் இல. **2**

# வினாத்தாள் II

2019.03.31 / 10:45 - 12:00

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் :...........................................

**பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள் :**

- ✳ உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே இருக்கும் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ✳ **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- ✳ இவ்வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன. சில வினாக்களில் உபபகுதிகளும் உள்ளன.
- ✳ **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.**
- ✳ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் **புள்ளிக்கோட்டின் மீது** எழுதுக.
- ✳ விடையின் கீழ்க் கோடிடுமாறு கேட்கப்பட்டிருக்கும் போது **சரியான விடையைத் தெரிவுசெய்து, அதன் கீழ்க் கோடிடுக.**
- ✳ செய்து பார்ப்பதற்காகத் தாளொன்று வழங்கப்படும்.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| மொத்தம் | |
| இறுதிப் புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்**<br>புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **இரண்டாவது பரீட்சகர்**<br>முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T |
| **மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர்**<br>மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/T/EMF |
| **பிரதான பரீட்சகர்**<br>மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும். | V/II/T/CH |

[பக். 2 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**1.** பின்வரும் பந்தியை வாசிக்க.

இராமன் சிறுவனாக இருந்தபோது கூனியின் கூனல் முதுகில் விளையாட்டாக வில்லுண்டையால் அடித்தான். அதனால் அவள் இராமன் மேல் வெறுப்புக் கொண்டிருந்தாள். எனவே முடிசூட்டு வைபவத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு முடிவு செய்தாள். கூனி கைகேயியின் தூய மனதை மாற்றி அரசன் அவளுக்கு முன்பு கொடுத்திருந்த வரங்களைக் கேட்குமாறு வற்புறுத்தினாள். இராமன் பதினான்கு ஆண்டுகள் காடாள வேண்டும் என்பது ஒரு வரம். கைகேயியின் மகன் பரதன் நாடாள வேண்டும் என்பது மற்றைய வரம். மனம்மாறிய கைகேயி, இரு வரங்களையும் விடாப்பிடியாகத் தசரதனிடமிருந்து பெற்றுக்கொண்டாள்.

பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்குக.

(i) இராமன் கூனியின் கூனல் முதுகில் எதனால் அடித்தான் ? ........................................................

(ii) கைகேயி தசரதனிடமிருந்து பெற்றுக் கொண்ட **இரு** வரங்களையும் எழுதுக.

(1) ....................................................................

(2) ....................................................................

(iii) 'சுத்தம்' என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவுசெய்து எழுதுக.

........................................................

(iv) படர்க்கை ஒருமைப் பெயர்ச்சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

........................................................

(v) கீழ்க்காலும் சுழியும் கொண்ட எழுத்தையுடைய சொல்லைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

........................................................

**2.** கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) நாம் பிறருக்கு ............................ (கைமாறு / கைம்மாறு) கருதாமல் உதவுதல் நன்று.

(ii) காந்தியடிகள் ஏழை மக்களின் வாழ்க்கையை உயர்த்தத் ............................ (திடசங்கற்பம் / திடசங்கட்பம்) கொண்டார்.

**3.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் / பயனிலைத் தொடர்புகள் சரியாக எழுதப்பட்டிருப்பின் **(✓) எனவும் பிழையாக எழுதப்பட்டிருப்பின் (×) எனவும் அடைப்புக்குள் இடுக.**

(i) அப்பா கடைக்குப் போனால் நானும் அவருடன் போவேன். (.......)

(ii) சிறந்த நூல்கள் நல்ல நண்பர்களைப் போன்றது. (.......)

(iii) பாதையின் இருமருங்கிலும் வரிசையாக மரங்கள் நடப்பட்டுள்ளன. (.......)

(iv) சபரி ஒவ்வொரு பழங்களாக சுவைத்துப் பார்த்தாள். (.......)

**4.** கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் தடித்த எழுத்துகளில் உள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான கருத்தை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

(i) கந்தசாமி வீடு கட்டப் போவதை அறிந்த சிலர் **வயிற்றெரிச்சல்** அடைந்தனர்.
(பொறாமை / கோபம்)

(ii) நான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த செய்தியைக் கேட்டு அம்மா **உச்சிகுளிர்ந்தார்.**
(உற்சாகமடைந்தார் / மகிழ்ச்சியடைந்தார்)

**5.** கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய **தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

(i) கடவுள் இல்லை என்று வாதிடுபவன் :.......................................................

(ii) அறுபதாவது ஆண்டின் இறுதியில் எடுக்கப்படும் விழா :.......................................................

[பக். 3 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



சுட்டெண் :.......................................................

6. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் இருக்கும் **வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

உடலின் உறுதி உடையவரே
உலகில் இன்பம் உடையவராம்;

..........................................................................

இனிய வாழ்வு தந்திடுமோ ?

7. கீழே தரப்பட்டுள்ள பெண்பால் சொல்லுக்குப் பொருத்தமான **ஆண்பால்** சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

வீராங்கனை :......................................

8. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் **நிறுத்தக் குறிகளை** இடுக.

மெய் வாய் கண் மூக்கு செவி என்பன ஐம்பொறிகளாகும்

9. கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

சத்தியம் பேசுதல் அவர்கொள்கை;
தருமம் காத்தல் அவர்கொள்கை;
இத்தல மக்கள் யாவர்க்கும்
இன்ப சுதந்திரம் அவர்கொள்கை.

'அறத்தைக் கடைப்பிடித்தல் அவர்கொள்கை' என்பதை நன்கு வெளிப்படுத்தும் வரியை இக்கவிதையிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

:..................................................................................

10. பின்வரும் பழமொழியைப் **பூர்த்தி செய்க.**

ஒரு பானைச் .................................... ஒரு சோறு பதம்.

11. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை **ஆங்கிலத்தில்** எழுதுக.

(i) பாம்பு :..............................................

(ii) வகுப்பறை :..............................................

12. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு ஆங்கில வாக்கியத்திலும் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைப் பெட்டியில் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து தெரிவுசெய்து **வெற்றிடத்தை நிரப்புக.**

(i) We buy .......................... from the post office.

(ii) We buy .......................... from the pharmacy.

| | |
|---|---|
| stamp | book |
| bread | medicine |

13. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லும் விதத்தில் **ஆங்கில எழுத்துகளில்** எழுதுக.

தயவுசெய்து வெளியே செல். :..................................................................................................

14. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் **தமிழில்** எழுதுக.

வ(த்)துற தென்ன. :..................................................................................................

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் **தமிழில்** எழுதுக.

நாங்கள் பாடசாலைக்குப் போவோம். :..................................................................................



Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



● தரப்பட்டுள்ள புள்ளிக் கோடுகளில் விடைகளை எழுதுக.


**16.** 'மூவாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பது' என்னும் எண்ணுடன் ஒன்றைக் கூட்டும்போது கிடைக்கும் எண்ணை இலக்கங்களில் எழுதுக. :............................

**17.** இப்பெட்டியினுள் உள்ள எண்களுள் 7 இனால் மீதியின்றி வகுபடக்கூடிய எண் யாது ? :............................

| | |
|---|---|
| 398 | 679 |
| 452 | 531 |

**18.** மூன்று ஈர்க்குத் துண்டுகளினால் வகைகுறித்துக் காட்டக்கூடிய 10 இலும் குறைந்த உரோமன் எண்குறி ஒன்றை எழுதுக. :............................


**19.** ஒவ்வொன்றும் 1 சதுர சென்ரிமீற்றர் பரப்பளவைக் கொண்ட 10 சதுரங்களினால் ஆன உரு இங்கு காட்டப்பட்டுள்ளது. இவ் உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு மொத்தப் பரப்பளவின் என்ன பின்னமாகும் ? :............................



**20.** மீன் தாங்கியொன்றில் 5லீற்றர் 375மில்லிலீற்றர் நீர் உள்ளது. அதனுள் மேலும் 4லீற்றர் 650மில்லிலீற்றர் நீர் ஊற்றினால் மீன் தாங்கியில் இருக்கும் நீரின் மொத்தக் கனவளவு எவ்வளவு ?

:.........லீற்றர் ..........மில்லிலீற்றர்


**21.** கீழே காட்டப்பட்டுள்ள உருளையில் இருக்கும்,



(i) தட்டையான மேற்பரப்புகளின் எண்ணிக்கை யாது ? :.......................

(ii) வளைந்த விளிம்புகளின் எண்ணிக்கை யாது ? :.......................

**22.**




(i) இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள கம்பிச் சட்டத்தின் உள்ளே எத்தனை செங்கோணங்கள் உள்ளன ? :.......................

(ii) கம்பிச் சட்டத்தின் சுற்றளவு சென்ரிமீற்றரில் எவ்வளவு ? :..................cm


**23.** பிற்பகல் 1.30 இற்குத் தனது வீட்டிலிருந்து புறப்பட்ட சாலினி பிற்பகல் 2.45 இற்கு புகையிரத நிலையத்தைச் சென்றடைந்தாள்.

(i) வீட்டிலிருந்து புகையிரத நிலையத்திற்குச் செல்வதற்கு சாலினிக்கு எடுத்த நேரம் மணித்தியாலங்களிலும் நிமிடங்களிலும் எவ்வளவு ?

:..........மணி .........நிமிடங்கள்

(ii) சாலினி புகையிரத நிலையத்தை அடைந்த நேரத்தை இருபத்துநான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக. .......... : .........மணித்தியாலம்

**24.**




A, B, C என்னும் மூன்று நகரங்களின் அமைவு படத்தில் காட்டப்பட்டுள்ளது. A இற்கும் B இற்கும் இடையிலான தூரம் 77 km ஆகும். A இற்கும் C இற்கும் இடையிலான தூரம் 122 km ஆகும். B இற்கும் C இற்கும் இடையிலான தூரம் எவ்வளவு ?

:...............km

[பக். 5 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com


Downloaded from:-www.paritchai.com



**25.** புத்தகக் கண்காட்சி ஒன்றைப் பார்ப்பதற்கு முதலாம் நாள் 754 பார்வையாளர்களும் இரண்டாம் நாள் 1295 பார்வையாளர்களும் மூன்றாம் நாள் 2920 பார்வையாளர்களும் வருகை தந்தனர். மூன்று நாட்களிலும் வருகை தந்தோரின் மொத்த எண்ணிக்கை யாது ?

:.......................

**26.** இக்கடிகார முகத்தில் மணித்தியால முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையே உள்ள கோணம் அடுத்து எவ்வளவு நிமிடத்திற்குப் பின்னர் செங்கோணமாக இருக்கும் ?




:............... நிமிடங்கள்

**27.** தரம் 5 மாணவர்களில் $\frac{2}{3}$ பகுதியினர் கிறிக்கெற் ஆட்டத்தினை விரும்புகின்றனர். $\frac{1}{6}$ பகுதியினர் எல்லே ஆட்டத்தினை விரும்புகின்றனர். கூடுதலானோர் விரும்பும் ஆட்டம் எது ?

:...........................

**28.** மரமொன்றில் இருந்து பறிக்கப்பட்ட மாம்பழங்களின் எண்ணிக்கை 525 ஆகும். அவற்றைச் சமனாக 5 பெட்டிகளில் அடுக்குவதற்கு பெட்டியொன்றில் இடப்பட வேண்டிய மாம்பழங்களின் எண்ணிக்கை எத்தனை ?

:...........................

**29.** குழுவொன்றில் உள்ள பிள்ளைகள் மிகவும் விரும்பும் பானம் தொடர்பான தகவல்கள் வரைபில் காட்டப்பட்டுள்ளன.


(i) பழரசத்தை விரும்பும் பிள்ளைகளின் எண்ணிக்கை 14 ஆகும் அதனை வரைபில் வரைந்து காட்டுக.

(ii) அதிகமான பிள்ளைகள் விரும்பும் பானம் எது ?

:...................................

(iii) அப்பானத்தை விரும்பும் பிள்ளைகளின் எண்ணிக்கை எத்தனை ?

:...................................




● **30** தொடக்கம் **59** வரையிலான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவுசெய்து **அதன் கீழ்க் கோடிடுக.**

**30.** ஐந்து இதழ்களை உடைய வெள்ளை நிறமான பூக்கள் பூக்கும் தாவரம்

(1) அந்தூரியம் (2) நந்தியாவட்டை (3) நாகமலர் (4) சூரியகாந்தி

**31.** பாரமான ஒரு பொருளை ஓர் இடத்திலிருந்து மற்றுமோர் இடத்துக்கு கொண்டு செல்வதற்காகப் பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவுசெய்க.

(1) குறடு, திருகாணி செலுத்தி, சுத்தியல்
(2) கத்தரிக்கோல், தூக்குக் குண்டு, பாரம் தூக்கி
(3) சில்லு வண்டி, பாரம் தூக்கி, கப்பி
(4) திருகாணி செலுத்தி, சில்லு வண்டி, கத்தரிக்கோல்

**32.** அதிக மாவட்டங்கள் இருக்கும் ஒரு மாகாணம்

(1) சப்பிரகமுவ மாகாணம் (2) வட மாகாணம்
(3) ஊவா மாகாணம் (4) மேல் மாகாணம்

[பக். 6 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**33.** மஞ்சள் நிறமான மரக்கறிகளிலும் பழவகைகளிலும் அதிகம் காணப்படுவது

(1) விற்றமின் A (2) விற்றமின் B (3) விற்றமின் C (4) விற்றமின் D

**34.** ஒரு நாட்டுக்கே உரித்தான மீன்

(1) நரைப்புழுணி (2) பர்ட்விங் (3) மரத்தேரை (4) புள்ளிக்கோட்டி

**35.** வளமான மண்ணின் பண்பு **அல்லாதது**

(1) மண்புழுக்கள் காணப்படுதல்
(2) தாவர விலங்குக் கழிவுகளைக் கொண்டிருத்தல்
(3) கறுப்பு நிறமாக இருத்தல்
(4) ஈரலிப்பற்று உலர்ந்து காணப்படுதல்

**36.**



உருவில் உள்ளவர்

(1) கொங்காலேகொட பண்டா
(2) அநகாரிக தர்மபால
(3) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
(4) மொஹராவில கப்பெட்டிப்பொல திசாவை

**37.** இலங்கைக்கு கிழக்கே காணப்படும் நாடு

(1) அமெரிக்கா (2) இந்தியா (3) பூட்டான் (4) தாய்லாந்து

**38.** கிழங்குப் பயிர்களுக்கு சேதத்தை ஏற்படுத்தும் **இரண்டு** பிராணிகளாவன

(1) பன்றி, எலி (2) ஆமை, தவளை
(3) நத்தை, மண்புழு (4) குரங்கு, ஓணான்

**39.** பூனையினால் பரவக்கூடியது

(1) கழிச்சல் (2) கொள்ளை நோய் (3) மலேரியா (4) நீர்வெறுப்பு நோய்

**40.** "மங்கையர் எல்லோரும் வாருங்கடி - நல்ல மாணிக்க கங்கை நீர் ஆடுங்கடி" என்னும் பாடல்

(1) தாலாட்டுப் பாடல் (2) கும்மிப் பாடல்
(3) அரிவிவெட்டுப் பாடல் (4) மீனவர் பாடல்

**41.** நல்ல வேளை உணவொன்றின் ஓர் இயல்பு **அல்லாதது**

(1) வேளை உணவில் உணவோடு பானமும் அடங்கியிருத்தல்
(2) சுவைத்து உண்ணக் கூடியதாக இருத்தல்
(3) குறைவான போசாக்குப் பெறுமானமுடையதாக இருத்தல்
(4) குடும்பத்தில் அனைவருக்கும் போதுமானதாக இருத்தல்

**42.** இலங்கைத் தேசியக்கொடியில் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் காட்டப்பட்டிருக்கும் நிறங்கள் முறையே

(1) மஞ்சள், சிவப்பு (2) பச்சை, சிவப்பு
(3) மஞ்சள், செம்மஞ்சள் (4) செம்மஞ்சள், பச்சை

**43.** நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட தாவரம்

(1) பப்பாசி (2) கடல்மா (3) எண்ணெய் (4) துத்திரி

[பக். 7 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com

Downloaded from:-www.paritchai.com



**44.** நீரில் மூழ்கிய ஒருவருக்கு உடனடியாகச் செய்ய வேண்டியது

(1) ஈர உடையை அகற்றுதல்
(2) உடலை நன்கு போர்த்துதல்
(3) நன்றாகச் சுவாசிப்பதைச் சோதித்தல்
(4) சூடான பானத்தைக் குடிக்கக் கொடுத்தல்

**45.** ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறும் பிராணி

(1) நத்தை (2) தவளை (3) கறையான் (4) இராமபாணம்

**46.** ஒரு கண்ணாடிக் குவளையில் உள்ள குளிர் நீர் மீது சிறிதளவு தேயிலையை இடும்போது அந்நீர் கணப்பொழுதில் கடும் கபில நிறமாக மாறியது. இத்தேயிலை வகை பற்றி என்ன கூறலாம் ?

(1) செயற்கை நிறமூட்டப்பட்டது. (2) தரம் குறைந்தது.
(3) தரமானது. (4) குறைந்த சாயம் கொண்டது.


**47.** 'துறப்பணம்' பயன்படுத்தப்படுவது

(1) ஆணி அறைவதற்கு (2) துளை இடுவதற்கு
(3) மட்பாண்டம் செய்வதற்கு (4) கருங்கல் உடைப்பதற்கு

**48.** தண்டுத் துண்டுகளை நாட்டுவதன் மூலம் புதிய தாவரங்களைப் பெறக்கூடிய பயிர்

(1) தக்காளி (2) பயற்றை (3) கங்குன் (4) புடோல்

**49.** படத்தில் காட்டியுள்ள வீதிச் சைகையினால் கூறப்படும் செய்தி யாது ?



(1) முன்னால் பாதை வேலை
(2) முன்னால் சிறுவர் கடவை
(3) முன்னால் பாதசாரிகள் கடவை
(4) முன்னால் இடப்பக்கம் திரும்பவும்

**50.** புதுமணத் தம்பதியினர் முன்னால் நீர் நிரம்பிய பாத்திரத்தில் வெண்ணிறப் பூக்களைப் போட்டு எடுத்துச் செல்லல் எவ்வினத்தவரின் நீருடன் பிணைந்த திருமணப் பழக்கம் ?

(1) கிருஸ்தவர் (2) முஸ்லிம் (3) தமிழர் (4) சிங்களவர்

**51.** சூரியனுக்கு அண்மையிலும் புவிக்கு அண்மையிலும் இருக்கும் கோள்கள் **முறையே**

(1) செவ்வாய், புதன் (2) புதன், வியாழன்
(3) சனி, செவ்வாய் (4) புதன், வெள்ளி

**52.** மழை பெய்வதால் ஏற்படத்தக்க நன்மை **அல்லாதது**

(1) சூழல் குளிர்ச்சி அடைதல்
(2) விவசாயத்துக்குத் தேவையான நீர் கிடைத்தல்
(3) வெள்ளப் பெருக்கு ஏற்படுதல்
(4) தாவரங்கள் துளிர்த்துப் புத்துயிர் பெறுதல்

**53.** பின்வரும் விளையாட்டுக்களில் உடற்சக்தி குறைவாக விரயமாகும் விளையாட்டு

(1) கயிறிழுத்தல் (2) பாரந்தூக்குதல் (3) ஓடுதல் (4) கரம் அடித்தல்

**54.** பக்கத்து வகுப்பின் மாணவர் குப்பைகளைக் கூட்டி தன் வகுப்பின் முன் வைக்கிறார். மற்றைய மாணவன், "நீங்கள் குப்பைகளை இங்கே இப்படி வைத்திருப்பது எனக்கு பெரும் வேதனையாக இருக்கிறது. அது அவ்வளவு நல்லதல்லவே? அதனைக் கொண்டு போய் குப்பைக் குழியில் போட்டீர்களானால் மிக நல்லது" என்கிறார் இது ஒரு

(1) மூர்க்கமான நடத்தை (2) உயர்வான நடத்தை
(3) தாழ்வான நடத்தை (4) உறுதிப்பாடான நடத்தை

Downloaded from:-www.paritchai.com

[பக். 8 ஐப் பார்க்க

Downloaded from:-www.paritchai.com




**55.** டெங்கு நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு பின்பற்றக்கூடிய நடைமுறையொன்று

(1) கொதித்தாறிய நீரைப் பருகுதல்
(2) சமைத்த உணவுகளை நன்கு மூடி வைத்தல்
(3) சூழவுள்ள சுற்றாடலைச் சுத்தப்படுத்தல்
(4) மரக்கறிகளைக் கூடுதலாக உட்கொள்ளல்

**56.** கி.பி. 1658 இல் இலங்கைக்கு முதன்முதல் வந்திறங்கிய வெளிநாட்டினர்

(1) போர்த்துக்கேயர் (2) ஒல்லாந்தர் (3) ஆங்கிலேயர் (4) அறாபியர்

**57.** படத்தில் காணப்படும் பிராணியின் பெயர் யாது ?




(1) அந்து
(2) வெட்டுக்கிளி
(3) வண்ணத்துப்பூச்சி
(4) பனிப்பூச்சி

**58.** இலங்கையின் மிகவும் உயரமான நீர்வீழ்ச்சி

(1) பம்பரக்கந்த (2) தியலுமை (3) துன்ஹிந்த (4) லக்சபான

**59.** படத்தில் தரப்பட்டுள்ள இலச்சினையினால் குறிக்கப்படுவது



(1) வீதி அபிவிருத்தி அதிகார சபை
(2) இலங்கைக் கட்டளைகள் பணியகம்
(3) இலங்கை மின்சார சபை
(4) மின் விநியோகிக்கும் இடம்

**60.** காடுகளை அழிப்பதனால் எதிர்காலத்தில் நடைபெறக்கூடும் என நீர் கருதும் விடயங்கள் பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்துக்குக் குறையாத சொற்களைக் கொண்டிருத்தல் வேண்டும். எழுவாய், பயனிலை தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..........................................................................................

..........................................................................................

2. ..........................................................................................

..........................................................................................

3. ..........................................................................................

..........................................................................................

***

Downloaded from:-www.paritchai.com